
ORDER ENQUIRY - PH - 9600270054



# TNPSC
# கட்டாயத் தமிழ்மொழி

## Group I / Group II

முதன்மைத் தேர்வுக்கானது (Mains)

ஆசிரியர்
பேராசிரியர் இளையராஜா கண்ணன்

வர்த்தமானன்

SAMPLE PG 1

TNPSC கட்டாயத் தமிழ்மொழி

ORDER ENQUIRY - PH - 9600270054

# TNPSC
# கட்டாயத் தமிழ் மொழி

Group I / Group II

முதன்மைத் தேர்வுக்கானது

*(Mains)*

பேராசிரியர் **இளையராஜா கண்ணன்**

வர்த்தமானன்

SAMPLE PG 2

ORDER ENQUIRY - PH - 9600270054

முதற் பதிப்பு : நவம்பர் 2022

*உரிமை : பதிவு செய்யப்பெற்றது*

**விலை**

**புத்தக விலை (Rs.650)**
**+**
**COURIER விலை (Rs.50)**

**மொத்தம் = Rs. 700**

வெளியீடு
**வர்த்தமானன் பதிப்பகம்**
21, இராமகிருஷ்ணா தெரு,
தியாகராய நகர், சென்னை- 600 017.
✆ : 044-2814 0347, 4350 2995 / 98407 67157, 89392 68597
இ-மெயில் : varthashree@gmail.com

*நூல் வடிவமைப்பு* : வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 17.
*அச்சு* : பிரிண்டெக் இந்தியா, சென்னை-5.

ORDER ENQUIRY - PH - 9600270054

# ஆசிரியர் உரை

போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளவிருக்கும் தேர்வர்கள் அனைவருக்கும் வாழ்த்துகள்.

அண்மையில் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் குரூப்-1 மற்றும் குரூப்-2 தேர்வுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டமான கட்டாயத் தமிழ் தகுதித் தேர்வை (விரிந்துரைக்கும் வகை) தேர்வர்கள் எளிதில் எதிர்கொள்ளும்படியாக இந்த நூலானது தயாரிக்கப்பட்டுள்ளது.

புதிய தேர்வின் பாடத்திட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் ஆங்கிலத் திலிருந்து தமிழில் மொழி பெயர்த்தல், தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தல் போன்ற பகுதிகளுக்கு தேவையான அடிப்படை ஆங்கில இலக்கணம், வாக்கிய அமைப்பு முறைகள் இந்நூலில் எளிமையாக கொடுக்கப் பட்டுள்ளன. மேலும் இந்தப் பகுதியில் பல எடுத்துக்காட்டுகளுடன், நீங்களே பயிற்சி செய்து பழக பயிற்சி வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

சுருக்கி வரைதல், பொருள் உணர்திறன், குறிப்புகளை விரிவாக்கம் செய்தல் போன்ற பகுதிகள் மிகத் தெளிவாக மாணவர்கள் எளிமையாக புரிந்து கொள்ளும் வகையில் அதற்கான வழிமுறைகள் மற்றும் எடுத்துக் காட்டுகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன.

கடிதம் வரைதல் பகுதியில் கடிதத்தின் வகைகள் ஒவ்வொன்றுக்கும் விரிவான விளக்கம் மற்றும் மாதிரி கடிதங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ் மொழி அறிவு பகுதியில் உள்ள சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுதல், பிரித்தெழுதுதல், எதிர்ச்சொல், பிழை நீக்கி எழுதுதல், எதிர்மறை வாக்கியம், பொருள் வேறுபாடு அறிதல் போன்ற பகுதிகளில் அதிக கவனம் செலுத்தி விரிவாகவும் எளிமையாகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக, மிக முக்கியமாக திருக்குறள் தொடர்பான கட்டுரைகள் பகுதியில், **பேராசிரியர் முனைவர் அரங்க இராமலிங்கனார்** தொகுத்தளித்த பல்வேறு தமிழறிஞர்களின் படைப்புகளை எடுத்துத் தந்துள்ளேன். பேராசிரியர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி!

திருக்குறள் கட்டுரைகள் போன்றே, அறிவியல் கட்டுரைகள் சிலவும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. இக்கட்டுரைகள் யாவும், 'நமது அறிவியல்' என்னும் மாத இதழில் வெளியானவை. இவற்றை பயன்படுத்திக் கொள்ள அனுமதியளித்த 'நமது அறிவியல்' இதழின் ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் **திரு. எஸ். விஜிக்குமார்** அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி!

இந்த நூலை உருவாக்க பல வழிகாட்டுதல்களையும் அறிவுரைகளை யும் வழங்கிய **பதிப்பாளர் ஸ்ரீ. வர்த்தமானன்** அவர்களுக்கும், முதன்மை பதிப்பாசிரியர் **திருமதி பொன். சொர்ணம் கந்தசாமி** அவர்களுக்கும் என் நன்றியினையும் வணக்கத்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்த்துகளுடன்
**இளையராஜா கண்ணன்**

ORDER ENQUIRY - PH - 9600270054

# பொருளடக்கம்


1. மொழிபெயர்த்தல் 9
   - அ. ஆங்கில வாக்கியங்கள் அமைத்தல் 18
   - ஆ. தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல் 45
   - இ. ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்தல் 75
   - ஈ. கலைச்சொற்கள் 101
2. சுருக்கி வரைதல் 149
3. பொருள் உணர்திறன் 163
4. விரித்து எழுதுதல் 181
5. கடிதம் வரைதல் 193
   - அ. அலுவல் சார்ந்த கடிதங்கள் 199
   - ஆ. பிற கடிதங்கள் 221
   - இ. கடிதங்களை கையாளும் முறைகள் 231
   - ஈ. அஞ்சல் குறியீட்டு எண் 238
6. தமிழ் மொழி அறிவு 241
   - அ. சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுதல் 241
     - i. தனிச்சொற்களைப் பயன்படுத்தி வாக்கியத்தில் அமைத்தல் 241
     - ii. மரபுத்தொடர் / உவமைத் தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியத்தில் அமைத்தல் 248
     - iii. பழமொழிகளைப் பயன்படுத்தி வாக்கியத்தில் அமைத்தல் 251
     - iv. இணைச்சொற்களைப் பயன்படுத்தி வாக்கியத்தில் அமைத்தல் 253
     - v. பொருள் வேறுபாடு அறிந்து வாக்கியத்தில் அமைத்தல் 255


SAMPLE PG 6

ORDER ENQUIRY - PH - 9600270054



ஆ. பிரித்தெழுதுதல் 267

i. சொற்களைப் பிரித்து எழுதுதல் 267

ii. பகுபத உறுப்பிலக்கணத்தின்படி சொற்களைப் பிரித்து எழுதுதல் 285

இ. எதிர்ச்சொல் 293

i. தனிச் சொல்லுக்கான எதிர்ச்சொல் 293

ii. எதிர்மறை வாக்கியம் 296

ஈ. பிழைத்திருத்தம் 300

i. மரபுப் பிழைகளை நீக்குதல் 300

ii. ஒருமை பன்மை பிழைகளை நீக்குதல் 303

iii. சந்திப் பிழைகளை நீக்குதல் 306

iv. வழூஉச் சொற்களின் திருத்தங்கள் 311

v. பிறமொழிச் சொற்களை நீக்குதல் 315

vi. பிழைகளை நீக்கி எழுதுதல் 325

8. திருக்குறள் கட்டுரைகள் 335

1. இந்திய அரசும் வள்ளுவர் அரசியலும் 335
*(சிலம்புச் செல்வர் ம.பொ.சி)*

2. அமைச்சரும் அரசரும் 338
*(சிலம்புச் செல்வர் ம.பொ.சி.)*

3. நல்ல நாடு 342
*(சிலம்புச் செல்வர் ம.பொ.சி.)*

4. கல்விக் கோட்பாடுகள் 345
*(பன்மொழி அறிஞர் கா. அப்பாத்துரையார்)*

5. திருக்குறள் - ஓர் திருப்பணி 349
*(பேரறிஞர் அண்ணா)*

6. திருக்குறள் 354
*(பேரறிஞர் அண்ணா)*

7. திருவள்ளுவர் - தமிழகத்தின் முதல் புரட்சியாளர் 358
*(பேராசிரியர் சி. இலக்குவனார்)*

8. கசடறக் கற்க 364
*(டாக்டர் நெ.து. சுந்தரவடிவேலு)*


SAMPLE PG 7

ORDER ENQUIRY - PH - 9600270054


9. திருக்குறளின் தத்துவம் 367
*(டாக்டர் டி.எம்.பி. மகாதேவன்)*

10. உலகப் பொதுமறை 374
*(பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன்)*

11. திருவள்ளுவரும் மனிதநேயமும் 382
*(பேராசிரியர் சி. நயினார் முகம்மது)*

12. திருக்குறளும் காந்தியடிகளும் 394
*(சி. இராஜேந்திரன், IRS)*

13. திருவள்ளுவரின் பொதுவுடைமைப் பார்வை 402
*(டாக்டர் கு. கணேசன்)*

14. திருவள்ளுவரின் நிர்வாகவியல் 412
*(டாக்டர் கு. கணேசன்)*

15. திருக்குறள் - வாழ்வியல் நூல் 426
*(பேராசிரியை டாக்டர் தி. தாமரைச் செல்வி)*

16. திருக்குறளும் தினசரி வாழ்க்கையும் 435
*(மருத்துவர் ப. ரமேஷ்)*

17. உலக அமைதிக்கு குறள் காட்டும் வழி 441
*(டாக்டர் மு.க. அன்வர் பாட்ஷா)*

18. திருவள்ளுவச் சமூகவியல் 466
*(பேராசிரியர் டாக்டர் க.ப. அறவாணன்)*

19. திருவள்ளுவம் வாழ்வியற் கோட்பாடு 475
*(பேராசிரியர் டாக்டர் க.ப. அறவாணன்)*

20. திருவள்ளுவம் மதம் சாராத் தெய்வக் கோட்பாடு 483
*(பேராசிரியர் டாக்டர் க.ப. அறவாணன்)*

21. திருவள்ளுவம் அரசியல் கோட்பாடு 492
*(பேராசிரியர் டாக்டர் க.ப. அறவாணன்)*

22. திருக்குறளில் கல்வியியல் கோட்பாடு 500
*(கவிமாமணி முனைவர் குமரிச்செழியன்)*

23. திருக்குறளில் செயல்சார்ந்த கல்வியியல் கோட்பாடுகள் 503
*(கவிமாமணி முனைவர் குமரிச்செழியன்)*

24. திருக்குறள் ஓர் அறிவியல் களஞ்சியம் 530
*(கவிமாமணி முனைவர் குமரிச்செழியன்)*

SAMPLE PG 8

ORDER ENQUIRY - PH - 9600270054


25. திருக்குறள் - ஒரு திருப்புமுனை 544
*(பேராசிரியர் டாக்டர் அரங்க. இராமலிங்கம்)*

7. அறிவியல் கட்டுரைகள் 551

*பேராசிரியர் இளையராஜா கண்ணன் எழுதியவை :*

1. காலநிலை மாற்றத்திற்கான தீர்வு - CCS தொழில்நுட்பம் 551
2. பூமியின் சுழற்சி வேகத்தை குறைக்கும் அணை 554
3. குட்டி சூரியன் 556
4. ஃபிளைவீல் பேட்டரி 559
5. இளமை திரும்புதே! 562
6. இறக்கை இல்லா காற்றாலை 565
7. மிஷன் சக்தி 568
8. நியூரோலிங்க் 571
9. ஆதித்யா -L1 மிஷன் 575
10. நிஷார் மிஷன் 578

*பொன். ராஜேந்திரன் எழுதியவை :*

11. செயற்கை சூரியன்! 581
12. செயற்கை நிலா 585
13. நியூட்ரினோ துகள்கள் 589
14. சூரியனில் நுழைந்த நாசா தூதுவன் 593

*முனைவர் இ.எஸ். கார்த்தி எழுதியது :*

15. உயர்ந்து வரும் வெப்பம் 599

9. மாதிரி வினாத்தாள் 601

SAMPLE PG 9

ORDER ENQUIRY - PH - 9600270054

# I - ஆங்கில வாக்கியங்கள் அமைத்தல் *(Making English Sentences)*

### ***வாக்கியம் என்றால் என்ன?***

வாக்கியம் என்றால் என்ன?

சொற்கள் மரபுக்கேற்ற ஒழுங்கு முறையில் அமைந்து நிறைவுற்ற பொருளைத் தருவதே வாக்கியமாகும்.

வாக்கிய அமைப்புகளை அறிவதற்கு முன் அதற்குரிய விதிகளை அறிந்து கொள்ளுங்கள்.

1. வாக்கியம் நிறைவுற்ற பொருளைத் தரும்.
2. வாக்கியத்தின் முதல் எழுத்து **Capital** எழுத்தாக இருக்கும்.
3. வாக்கியத்தின் இறுதியில் முற்றுப்புள்ளியோ. வினாக் குறியோ (?), வியப்புக்குறியோ (!) இடம் பெறும்.
4. பேசும்போதும், படிக்கும்போதும். வாக்கியத்தைத் தொடங்கும் முன்னும். முடித்த பின்னும் ஒரு நொடி இடைவெளி **(Pause)** விட்டு நிறுத்திப் பிறகே பேச வேண்டும் அல்லது படிக்க வேண்டும்.

முறையான இடங்களில் அமைந்த சொற்களால் தெளிவான கருத்தைப் புலப்படுத்தி எழுதுவதும் வாக்கியம்; பேசுவதும் வாக்கியம்; மனத்தினாலே எண்ணினாலும் அது வாக்கியமே.

### ***ஒரு சொல் வாக்கியங்கள்***

பல எழுத்துக்கள் சேர்ந்து சொல்லாக அமையும்.

**He, she, good, child, father.**

ஆனால் **I** என்னும் ஒரே எழுத்து மட்டும் தனிச் சொல்லாக அமைகிறதல்லவா?

**I** - நான்

**I** என்னும் சொல்லை மட்டும் வாக்கியத்தில் எங்கு வந்தாலும் **Capital** எழுத்தால் குறிப்பிட வேண்டும். **I** என்னும் எழுத்து ஒரு சொல்லில் வந்தால் சிறிய எழுத்தால் **(i)** குறிப்பிடுதல் வேண்டும்.

ஓர் எழுத்தே ஒரு சொல்லாக அமைவது போல ஒரு சொல் மட்டுமே தனித்து நின்று வாக்கியமாக அமையும் இந்த வாக்கியத்தை ஒரு சொல் வாக்கியம் **(One word Sentence)** என்று கூறுகிறோம்.

ORDER ENQUIRY - PH - 9600270054



## IV - *சொற்றொடர் அமைப்பதில் தெளிவு*

சில வாக்கியங்களில் ஒரு **Phrase** நாம் கொள்ளும் பொருளுக்கேற்ப **adjective phrase** ஆகவோ **adverb phrase** ஆகவோ திகழும்.

**I saw a cat in the street.**
**நான் ஒரு பூனையைத் தெருவில் கண்டேன்**

இந்த வாக்கியத்தில் **in the street** என்பது ஒரு **phrase.** இது என்ன **phrase?** 'தெருவில் ஒரு பூனையை, நான் கண்டேன்'. என்று கொண்டால், **in the street** என்பது பூனையைச் சிறப்பிக்கும் சொற்றொடர். எனவே இது **adjective phrase** ஆகும்.

நான் ஒரு பூனையைத் 'தெருவில் கண்டேன்' என்று பொருள் கொண்டால், **in the street** என்பது **saw** என்னும் வினைச்சொல்லைச் சிறப்பிக்கிறது. எனவே இது **adverb phrase** ஆகும். இதுபோல ஒரு **phrase** வாத்தியத்தில் நாம் கொள்ளும் பொருளுக்கேற்ப மாறுகிறது.

ஒரு **phrase**-ஐ வாக்கியத்தில் அமைக்கும் போது பொருள் தெளிவுக்கேற்ற இடத்தில் அமைக்கவேண்டும்.

**The boys smiled at girl with funny faces.**

இந்த வாக்கியத்தைப் படியுங்கள். சிறுவர்கள் வேடிக்கையான முகங்களைப் பெற்ற ஒரு பெண்ணைப் பார்த்துச் சிரித்தார்கள் என்று பொருள் தரும் முறையில் உள்ளது. ஒரு பெண்ணுக்குப் பல முகங்களா எனக் கேட்கும் வகையில் - மயக்கம் தரும் வகையில் அமைந்துள்ளது. இந்த வாக்கியத்தின் **phrase**-ஐ சற்றே இடம் மாற்றி அமைத்தால் பொருள் நன்கு புரியும்.

**Making Funny faces the boys smiled at the girl**
**வேடிக்கையான முகங்களுடன் சிறுவர்கள் ஒரு பெண்ணைப் பார்த்துச் சிரித்தார்கள்.**

எனவே **phrase**-ஐ தகுந்த இடத்தில் தேவையான ஒரு கமா (,) போட்டு வாக்கியத்தை அமைப்பது தெளிவு தரும்.

### துணை வாக்கியங்கள் *(Clauses)*

**Phrase**-ஐ போல வாக்கியத்தில் அமையும் மற்றொரு சொல் தொகுதியே **Clause** என்பது.

**Clause என்பது யாது?**

1. சில சொற்களின் தொகுதியே Clause.
2. Clause என்பது எழுவாயும் பயனிலையும் பெற்று வரும்.

SAMPLE PG 11

ORDER ENQUIRY - PH - 9600270054

# தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல்

## மாதிரி - 1

### கரோனா காலத்தில் மாற்றுக் கல்வி ஏன் அவசியமாகிறது?

மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட ஓர் உழைக்கும் மக்கள் குடியிருப்பு அது. மதியம் 12 மணிக்கு ஒரு வீட்டின் வாசல் குழந்தைகளால் நிரம்பி வழிகிறது. தனிநபர் இடைவெளி, முகக் கவசம் என எந்தவித கரோனா பாதுகாப்பு நடவடிக்கைகளும் இன்றிக் குழந்தைகள் ஓடியாடி விளையாடிக்கொண்டிருந்தன. என்ன நடக்கிறது என்று விசாரித்தால் டியூஷன் என்கிறார்கள் குழந்தைகள். பள்ளிகள் நீண்ட நாட்களாக மூடப்பட்டிருக்கின்றன. முழு முடக்கம் பகுதி முடக்கமாகிக் கொஞ்சம் கொஞ்சமாகக் கணவன் - மனைவி இருவரும் வேலைக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம். வேலைத் தளத்திலிருந்து வீடு திரும்பும் வரை பதின்பருவக் குழந்தைகளை வீட்டில் விட்டுச்செல்ல முடியாது என்ற நெருக்கடி ஒருபக்கம். ஊரில் இருக்கும் ஒரு படித்த பையனையோ அல்லது பெண்ணையோ, அவர்களே 'ஆசிரியர்' என இவர்களே நாமகரணம் சூட்டி, 'உங்கள் வீடே பள்ளிக்கூடம்' என்று திடீர் தனிப் பயிற்சி மையங்களை உருவாகி விட்டனர்.

பள்ளிகளைத் திறக்காவிட்டால் என்ன? இணையதள வசதி இருக்கிறது. கல்வித் தொலைக்காட்சி இருக்கிறது. இதோ ஆசிரியர் தினந்தோறும் வாட்ஸ்அப் வழியே பாடங்களை அனுப்பி வைக்கிறார். முடிந்தவரை படித்துக்கொள்ளுங்கள் என்கிறது அரசு. முடிந்தவரை அல்ல, முற்றிலும் படிக்க முடியவில்லை என்ற எதார்த்தத்தைத் தெரிந்துகொள்ளக் கள ஆய்வுகள் ஏதும் தேவை இல்லை. அதேசமயம், தனியார் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளும் திரிசங்கு நிலையில்தான் உள்ளனர். தனி மடிக்கணினி, தனியறை என்று படிக்க வைக்க வாய்ப்புக் கிடைத்த வர்க்கப் பிரிவைச் சார்ந்தவர்கள் இன்னும் கொஞ்சம் கூடுதலாகக் கற்றல் அடைவுகளை அடைந்துள்ளதாகக் கருத முடிகிறது.

## ENGLISH TRANSLATION

### Why is it necessary to have alternative Education during the times of Corona?

It was a residential area of the working class falling within the corporation limits. At 12 noon the entrance of a house was brimming with children. Without social

ORDER ENQUIRY - PH - 9600270054


| | | |
|---|---|---|
| Annulling | - | செல்லாததாக்கல், ரத்துசெய்தல் |
| Anode | - | நேர்மின்வாய் |
| Antacid | - | அமிலநீக்கி |
| Antagonistic | - | பகை உணர்வு கொண்ட |
| Antecedents | - | முன்னுதாரணங்கள் |
| Anti Biotic | - | நுண்ணுயிர்முறி |
| Anti Clock Wise | - | இடஞ்சுழி |
| Anti-Defection Law | - | கட்சித் தாவல் தடைச்சட்டம் |
| Antiquity | - | தொன்மை |
| Antiseptic | - | கிருமிநாசினி/நச்சுத்தடைப் பொருள் |
| Aphelion | - | சூரியனுக்கு தொலைவில் இருக்கும் பூமியின் நிலை (Portion) |
| App | - | செயலி |
| Apparatus | - | புதிய அமைப்பு, உபகரணம் |
| Appeal | - | முறையீடு |
| Aquifer | - | நீர்கொள்பாறை |
| Archaeologist | - | தொல்பொருள் ஆய்வாளர் |
| Archaic | - | தொன்மையான |
| Architecture | - | கட்டமைப்பு வடிவமைப்பு |
| Archives | - | ஆவணக் காப்பகம் |
| Armaments | - | போர்த் தளவாடங்கள் |
| Art Gallery | - | கலைக்கூடம் |
| Artefact | - | கைத்திறன் |
| Artesian | - | கைவினைஞர் |
| Arthasastra | - | அர்த்தசாஸ்திரம் |
| Article | - | உறுப்பு, பொருள் |
| Articulation | - | கலைச்சொல் |
| Articulatory Phonology | - | ஒலிபிறப்பியல் |
| Artificial Indicator | - | செயற்கை நிறங்காட்டி |
| Artificial intelligence | - | செயற்கை நுண்ணறிவு |
| Artificial respiration | - | செயற்கை சுவாசம் |
| Artificial transmutation | - | செயற்கை மாற்றுத் தனிமமாக்கல் முறை |
| Artisanal | - | கைவினை சார்ந்த |
| Aryans | - | ஆரியர்கள் |
| Ascension | - | வளர்ச்சி, உயர்வு |
| Asian Development Bank | - | ஆசிய வளர்ச்சி வங்கி |
| Asian Investment Infrastructure Bank | - | ஆசிய முதலீடு மற்றும் கட்டமைப்பு வங்கி |
| Assembly election | - | சட்டமன்றத் தேர்தல் |

SAMPLE PG 13

# உ. சுருக்கி வரைதல்

ஒரு பத்தியில் உள்ள தகவல்களை குறைந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி அதன் பொருள் மாறாமல் எழுதுவது சுருக்கி வரைதல் எனப்படும். சுருக்கி வரைதல் ஒரு நுட்பமான கலையாகும். மேலும் ஒருவரின் புரிந்து கொள்ளும் திறனையும் இது சோதிக்கிறது.

**விதிமுறை**

- ★ பத்தியை கவனமாகப் படிக்கவும்
- ★ முக்கியக் குறிப்புகளைக் குறித்துக் கொள்ளவும்.
- ★ முடிந்தவரை எளிய நடையில் எழுத வேண்டும்
- ★ பத்தியில் உள்ள முக்கியக் கருவை மாற்றாமல் சொந்த நடையில் எழுத வேண்டும்.


**நினைவில் கொள்ள வேண்டியவை**

- ★ கொடுக்கப்பட்ட பத்தியை 1/3 பகுதியாக சுருக்கி எழுத வேண்டும்.
- ★ பத்தியில் கொடுக்கப்பட்ட அனைத்து முக்கிய குறிப்புகளும் சுருக்கி எழுதும் பத்தியில் இருக்க வேண்டும்.
- ★ கொடுக்கப்பட்ட பத்தியின் கருத்தை சுருக்கப்பட்ட பத்தி தெளிவாகக் காட்ட வேண்டும்.
- ★ சுருக்கப்பட்ட பத்தியில் சம்பந்தம் இல்லாத கருத்துகளை எழுதக்கூடாது.

**பின்பற்ற வேண்டியவை**

- ★ பத்தியை முழுமையாகப் படித்துவிட்டு தெளிவான புரிதலுடன் ஆரம்பிக்க வேண்டும்.
- ★ நீங்கள் சுருக்கி எழுதும் பத்தி எளிமையான வடிவத்தில் புரியும்படி இருக்க வேண்டும்.
- ★ எழுதும் காலம் (Tense) தெளிவாக இருக்க வேண்டும்.
- ★ படர்க்கை மற்றும் அயர்கூற்றில் எழுத வேண்டும்.
- ★ கேள்வியில் தலைப்பு கேட்டிருந்தால் மட்டுமே தலைப்பு தரப்பட வேண்டும்.
- ★ கண்டிப்பாக கொடுக்கப்பட்ட பத்தியின் அளவை விட அதிகமாக இருக்கக் கூடாது.

ORDER ENQUIRY - PH - 9600270054




ஒரு அலுவலகக் கடிதம் எழுதும்போது பின்வரும் குறிப்புகளை மனதில் கொள்ள வேண்டும்.

*(★ இப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிக் கடிதங்களில் உள்ள பெயர்கள், நாள், எண்கள் போன்றவை உதாரணத்திற்காக கொடுக்கப்பட்டவை. உண்மையானவை அல்ல)*

**1. துறையின் பெயர்**

அலுவலகக் கடிதத்தின் முகப்பில் கடிதத்தை அனுப்பும் துறையின் பெயர் எழுதப்பட வேண்டும்.

**உதாரணம் :**

தமிழ்நாடு அரசு
சிறுசேமிப்புத் துறை
தலைமை அலுவலகம்

குறிப்பு : துறையின் பெயர் எப்பொழுதும் மேல் மத்தியில் எழுதப்பட வேண்டும்.

SAMPLE PG 15

ORDER ENQUIRY - PH - 9600270054



## மாதிரி கடிதம் : 2

அ 1/ 370/ 2022

இயக்குநர் அலுவலகம்
சிறுசேமிப்புத் துறை
சென்னை
நாள் : 26.3.2022

பொருள் : அலுவலகக் கோப்புகள் காணாமல் போனது பற்றி விசாரணை தொடர்பாக.

பார்வை : குறிப்பாணை எண் C - 191 / நாள் 18.01.2022

பார்வையில் காணும் குறிப்பாணையைத் தொடர்ந்து, இப்பொருள் குறித்து தங்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால், தாங்கள் இவ்வலுவலகத்தில் இயக்குநர் முன்பாக 8.04.2022 அன்று முற்பகல் 11.00 மணியளவில் நேரில் ஆஜராகக் கேட்டுக் கொள்ளப் படுகிறது.

பெறுநர் :
சம்பந்தப்பட்ட நபர் / அலுவலர்
(பதிவஞ்சல் மூலம்) / (அலுவலர் மூலம் கையொப்பம்)

கையொப்பம்
(இயக்குநருக்காக)

ORDER ENQUIRY - PH - 9600270054

# 6. தமிழ் மொழி அறிவு

## அ சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுதல்

### I) தனிச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியத்தில் அமைத்தல்

ஒரு சொல், ஒரு சொற்றொடர், பழமொழி, மரபுத்தொடர், இணைத் தொடர்கள் போன்றவை கொடுக்கப்படும் அதனை ஒரு வாக்கியமாகவோ அல்லது இரு வாக்கியங்களாகவோ எழுத வேண்டும்.

**விதிமுறைகள்**

1. சொந்த மொழிநடையில் எழுத வேண்டும்.
2. எளிய வாக்கியங்களாக இருக்க வேண்டும்.
3. மிகச்சிறிய வாக்கியங்களைத் தவிர்க்க வேண்டும்.
4. கொடுக்கப்பட்டதன் பொருள் எளிதில் புரியும்படி வாக்கியத்தை அமைக்க வேண்டும்.
5. கொடுக்கப்பட்ட சொல்லை இரு வாக்கியங்களாக எழுதலாம். ஆனால் அந்த சொல் ஒருமுறை மட்டுமே வரவேண்டும்.
6. வாக்கியத்தில் இலக்கணப் பிழை, சந்திப் பிழை இல்லாமல் எழுத வேண்டும்.

**தனிச்சொற்கள்**

1. ஒழுக்கம் - மனிதன் நேர்மையான வாழ்க்கைக்குரிய பாதையிற் செல்லுதலே ஒழுக்கம் ஆகும்.
2. உணவு - கர்ம வீரர் காமராசர், மாணவர்கள் பசியின்றிப் படிக்க மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்.
3. ஏற்றுமதி - ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைப் பிற நாடுகளுக்கு அனுப்புவது ஏற்றுமதி எனப்படும்.
4. முத்தமிழ் - தமிழுக்கு முத்தமிழ் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு.
5. இலக்கிய வடிவம் - புதுக்கவிதை தமிழின் புதிய இலக்கிய வடிவம் ஆகும்.
6. கண்டம் - பறவைகள் கண்டம் விட்டுக் கண்டம் பறக்கின்றன.

ORDER ENQUIRY - PH - 9600270054



## II) மரபுத் தொடர் / உவமைத் தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியத்தில் அமைத்தல்

ஒரு சொல் அல்லது சொற்றொடர் அதன் நேரான பொருளை உணர்த்தாமல் வழிவழியாக வழங்கப்பட்டு வரும் மரபுப் பொருளை உணர்த்துவதனால் மரபுத்தொடர் எனப்படுகிறது.

ஒரு பழமொழியின் குறுகிய வடிவம் மரபுத் தொடராக இருக்கலாம். ஆனால் இவ்விரண்டுக்கும் முக்கிய வேறுபாடு உள்ளது. பழமொழியை வெவ்வேறு சூழ்நிலைகளில் பயன்படுத்தலாம். இது சூழ்நிலைக்கு தகுந்தவாறு பொருளைத் தரும். மரபுத்தொடரை பெரும்பாலும் அப்படி பயன்படுத்த முடியாது.

**எ.கா : காதுகுத்துதல்**

இந்த மரபுத்தொடர் ஏமாற்றுவதை மட்டுமே குறிக்கும்.

**மனமிருந்தால் மார்க்கமுண்டு**

இந்தப் பழமொழியை சூழ்நிலைக்கு தகுந்தவாறு பயன்படுத்தலாம்.

**உதாரணமாக**

1. உதவி செய்ய முற்படும் சூழ்நிலை.
2. புதிய முயற்சியை பரிச்சித்து பார்க்க தயங்கும் சூழ்நிலை.
3. தோல்வியில் இருக்கும்போது அவனுக்கு தன்னம்பிக்கை கொடுக்கும் சூழ்நிலை.

போன்ற பல சூழ்நிலைகளில் பயன்படுத்தலாம்.

### மரபுத் தொடர் / உவமைகள்

**1. எட்டாக்கனி**

முயன்றால் எந்த செயலிலும் வெற்றி என்பது எட்டாக்கனி இல்லை.

**2. உடும்புப்பிடி**

மகிழன் தான் மருத்துவம் படிக்க வேண்டும் என்று உடும்புப் பிடியாய் இருந்தான்.

**3. கிணற்றுத்தவளை**

கிணற்றுத் தவளை போல் எதுவும் தெரியாமல் இருக்கக் கூடாது.

**4. ஆகாயத்தாமரை**

ஆகாயத் தாமரையை பார்க்க எண்ணி இன்று கிடைக்கும் வாய்ப்பை தவறவிடாதே!

**5. எடுப்பார் கைப்பிள்ளை**

எடுப்பார் கைப்பிள்ளை போல் யார் எது சொன்னாலும் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

SAMPLE PG 18

ORDER ENQUIRY - PH - 9600270054

# 7. திருக்குறள் கட்டுரைகள்

## 1. இந்திய அரசும் வள்ளுவர் அரசியலும்

சிலம்புச் செல்வர் ம.பொ.சி

இந்தியக் குடியரசு அமைப்புச் சட்டப்படி மாகாணங்களுக்கு 'ஸ்டேட்' என்ற பெயர் கொடுக்கப்பட்டிருப்பதால், மத்திய அரசானது பல அரசுகள் கலந்த கூட்டரசு என்று ஏற்படுகிறது. அந்தக் கூட்டரசுதான் 'யூனியன்' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. ஆனால், யூனியனுக்கு உட்பட்ட அரசுகள் சுதந்திரமுடையவை அல்ல என்பது அரசியல் அமைப்பைப் படித்தால் விளங்கும். வள்ளுவர் வகுத்த வழிப்படி இந்தியாவிலுள்ள மாகாண அரசுகள் படை, குடி நிதி, அமைச்சு, நட்பு ஆகிய எதிலும் பூரண அதிகாரமுடையன அல்ல,

### *அதிகாரமற்ற அரசு*

சான்றாக, தமிழ் மாகாணத்தையே எடுத்துக் கொள்வோம். இம்மாகாணத் திலுள்ள மக்கள் மத்திய அரசாங்கத்தின் பிரஜைகளேயொழிய, மாகாண அரசாங்கத்திற்கு மட்டும் உரிய பிரஜைகளல்லர். அதாவது ஒருவரைப் பிரஜையாக அங்கீகரிக்கவும் மறுக்கவும் இந்த மாகாண அரசுக்கு உரிமை இல்லை. அந்த உரிமை யூனியன் அரசுக்கே உண்டு. ஆகவே, தமிழக அரசுக் கெனத் தனியாகக் குடிமக்கள் இல்ல,

படை உடைய அரசே பலம் வாய்ந்த அரசு என்கிறது திருக்குறள். ஆனால், தமிழக அரசுக்குத் தனியாக ராணுவம் வைத்துக்கொள்ள உரிமை கிடையாது. இந்தியா முழுவதுக்குமாக ராணுவம் வைத்துக்கொள்ளும் உரிமை யூனியன் அரசிடமே இருக்கிறது. ஆகவே, தமிழக அரசுக்கெனத் தனியாகப் படையில்லை.

'கூழ்' - அதாவது பொருள் உடைய அரசே அரசென்கிறது திருக்குறள். ஆனால், அரசியல் சட்டப்படி நிதி விஷயத்தில் தமிழக அரசு பூரண அதிகாரம் படைத்ததல்ல. சென்னை அரசு வரி விதிக்கக்கூடிய இனங்கள் எவை, எவை? வரி விதிக்கக் கூடாத இனங்கள் எவை, எவை? என்பவற்றை அரசியல் சட்டம் தெளிவாகக் கூறுகிறது. மாநில அரசு வரி வசூலித்து வரும் இனங்களைக்கூட யூனியன் அரசு எந்த நேரத்திலும் எடுத்துக்கொள்ள முடியும். ஆகவே, நிதி விஷயத்திலும் தமிழக அரசு பூரண அதிகாரமுடையதன்று.

'நட்பு' என்பது, ஒரு அரசு தன்னை அடுத்துள்ள இன்னொரு அரசோடு அதாவது நாட்டோடு உறவு வைத்துக் கொள்வதையே குறிக்கும். ஆனால்,

ORDER ENQUIRY - PH - 9600270054



உண்டால் நோய் நிலைத்து விடும்' என விளக்கி உணவுப் பழக்கத்தால் நோய் வராமல் தடுக்கலாம் என விளக்குகிறார். நோய் நீங்க மருந்தையே உணவாகக் கொள்ளும் இக்காலத்தில் உணவையே மருந்தாகக் கூறும் மருத்துவம் சிறந்ததல்லவா?

நோய் வந்தபின் செய்ய வேண்டிய மருத்துவம் பற்றியும் குறிப்பாகத் தெளிவுப்படுத்துகிறார். நோயாளியைப் பிணித்துஉள்ள நோயை இன்ன தெனக் கண்டறிந்து, அதற்குரிய மூலகாரணத்தைக் கண்டறிந்து அதனை நீக்குதற்குரிய வழியைக் கண்டறிந்து தேர்ந்த அவ்வழியில் தவறு ஏற்படாமல் செம்மையாகச் செய்திடல் வேண்டும் எனத் தெளிவுபடக் கூறுகிறார். திருக் குறட் சொல்லோவியம் இதோ!

**நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்** (குறள் 948)

இத்துடன் நிற்கவில்லை.

"மருத்துவ நூல்களைக் கற்றறிந்த மருத்துவர் நோயாளியின் வயது, நோயின் தாக்க நிலை, பரவு நிலை ஆகிய அளவு, நோய் பற்றிய கால அளவு முதலியவற்றையும் கண்டறிந்து அவற்றிற்கேற்ப மருத்துவம் செய்ய வேண்டும்" என்றும் கூறுகிறார். இக்கால மருத்துவ வல்லுநரும் வியந்து போற்றும் இச்சீரிய மருத்துவ நுட்பத்தைப் பின்பற்றி மருத்துவம் செய்திருந்தால் நோயுற்று வருந்தி மடிந்த ஆருயிர்களை இறப்பினின்றும் காப்பாற்றியிருக்கலாமல்லவா?

### எய்ட்ஸ் நோய்

உணவுப் பழக்கத்தால் மட்டுமா நோய் ஏற்படுகிறது. தீய ஒழுக்கத் தாலும் நோய்கள் பிணித்து வருத்துகின்றன. இவற்றுள் எய்ட்ஸ் என்னும் உயிர்க்கொல்லி நோய் மிகக்கொடியது. இன்று உலகில் 40 மில்லியன் (4 கோடி) மக்கள் இக்கொடிய நோயால் வருந்துகின்றனர் (Borgna Bruner (edu), Time Aemanac 2003, Boston MA, USA, P. 551). இவ்வுயிர்க்கொல்லி நோய் வராமல் தடுக்கவும் நல்லவழி கூறுகிறார். இனிய நேரியகாதல் வாழ்வைச் சீரிய முறையில் சித்திரித்துள்ளார். இன்பத்துப் பாலில் சங்க இலக்கிய அகப்பொருள் மரபான பரத்தையிற்பிரிவைக் கூறாது விட்டு விட்டார். அறத்துப் பாலில் பிறன் இல்விழையாமை அதிகாரத்திலும் பொருட் பாலில் வரைவின்மகளிர் அதிகாரத்திலும் தகாத பாலியல் ஒழுக்கத்தால் உண்டாகும் தீயவிளைவுகளை விளக்கி, அச்ச உணர்வை உருவாக்குகிறார். திருவள்ளுவர் வலியுறுத்தும் பாலியல் நெறிகளைப் போற்றி நடந்தால் உயிர்க்கொல்லி எய்ட்ஸ் நோய் நெருங்கவும் கூடுமோ?

### இயற்கைச் சீற்றப் பேரழிவுகள்

வெள்ளப்பெருக்கு, புயல், பூகம்பம், கடல் கொந்தளிப்பு முதலியவற்றால் ஏற்படும் கொடுமைகளுக்கு ஆட்பட்டுத் துன்புறும் பேரழிவுக்கு அளவே இல்லை. ஐக்கிய நாடுகள் பெருமன்றம் போர் மூளாமல் அமைதி காக்கமுடியாது

SAMPLE PG 20

ORDER ENQUIRY - PH - 9600270054

புத்தக விலை (Rs.650)
+
COURIER விலை (Rs.50)

மொத்தம் = Rs. 700



TNPSC கட்டாயத் தமிழ்மொழி

## பேராசிரியர் இளையராஜா கண்ணன்

- பேராசிரியர் இளையராஜா கண்ணன் M.E., பட்டம் பெற்று, பழனி, ஸ்ரீ சுப்ரமண்யா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகின்றார்.
- பொறியியற் கல்லூரிப் படிப்பு முடிந்தவுடனே, நூல்களை எழுத ஆரம்பித்த இவர், தன்னுடைய நாற்பது வயதினை எட்டுவதற்குள் 28 நூல்களை எழுதிய சாதனைக்குச் சொந்தக்காரர். தமிழ்நாடு (அரசாங்கம், நிர்வாகம், ஆளுகை) எனும் நூல் இவரின் சாதனையில் ஒரு மணிமகுடம்.
- பல மாத, வார, இதழில் அறிவியல், கணிதம், தொடர்பான கட்டுரைகளை தொடர்ந்து எழுதி வருகின்றார்.
- 'சஞ்சீவன் ரிசர்ச் பார்க்' என்னும் நிறுவனத்தினை நிறுவி அதன் மூலம் பொறியியற் கல்லூரி மாணவர்களுக்குப் பருவத் தேர்வு - ஆய்விற்கு வழிகாட்டியாக இருந்து வருகின்றார்.
- பல கல்வி நிறுவனங்களுக்கு கல்வி ஆலோசகராக இருந்து வருகின்றார்.
- கல்வியாளர், அறிவியல் எழுத்தாளர், போட்டி தேர்வு பயிற்றுநர், தன்னம்பிக்கை பேச்சாளர், மொழிபெயர்ப்பாளர் என்னும் பன்முகங்களை கொண்ட இவர், தன்னுடைய அறிவாற்றல் முழுவதினையும் கல்விப் பணிகளுக்காக, மாணவச் சமுதாயம் பயனுற பணியாற்றி வருகின்றார்.